வருடாந்த அறிக்கை - 2015

இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம்

சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

வருடாந்த அறிக்கை - 2015

உள்ளடக்கம்

கௌரவ தலைவரின் செய்தி

(01)	பணிப்பாளர் சபை அறிக்கை	01 - 13
(02)	கணக்காய்வாளர் அறிக்கை	14 - 21
(03)	கணக்கீட்டு கொள்கைகள்	22 - 27
(04)	நிதி நிலமை பற்றிய கூற்று	28
(05)	உற்பத்தி, வர்த்தகம் ம்மற்றும் இலாப நட்டக் கணக்கு	29 - 30
(06)	காசுப் பாய்ச்சல் கூற்று	31
(07)	பங்குமுதல் மூலதன மாற்றம் பற்றிய கூற்று	32
(08)	கணக்குகளுக்கான குறிப்பு	33 - 34

தலைவரின் செய்தி

இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 46 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. உலக பொருளாதார மாற்றத்தின் படி இலங்கையின் பொருளாதாரமும் அதே வகையில் மாற்றடைதல் வேண்டும். அது தொடர்பாக போட்டித்தன்மையான சந்தைக்கும் நாம் பிரவேசித்தல் வேண்டியுள்ளது.

தற்பொழுது தனியார் நிறுவனங்கள் போட்டித்தன்மையான சந்தையில் பாரிய பகுதியொன்றை கைப்பற்றிள்ளது. அதே போன்று அரச நிறுவனம் என்ற வகையில் நாம் அந்த போட்டிக்கு முகங்கொடுத்தல் வேண்டும். இந்தப் போட்டித் தன்மைக்கு முகங்கொடுக்கும் போது தனியார் சந்தையை இலக்கு வைத்த புதிய மூலிகைகளை உற்பத்தி செய்தல் எம்மால் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது.

2015 ஆம் ஆண்டில் புதிய மூலிகை உற்பத்தி பண்ணையொன்று எம்மால் ஆரம்பிக்கப்பட்டது அந்த சவாலுக்கு பதில் வழங்கும் வித்திலாகும். தற்பொழுது நாம் போட்டிச் சந்தைக்கு பிரவேசித்துள்ளதுடன், இந் நாட்டுக்கு பிரதானமான தொழில்முயற்சி சந்தைப்படுத்தல் நிறுவனமான வரையறுத்த காகில்ஸ் தனியார் கம்பனி எமது உற்பத்தி சந்தைக்கு விற்பனை செய்யப்படுகின்ற பிரதான விற்பனையாளராக ஆவதற்கு எம்மால் முடிந்துள்ளது. தரப்படுத்தப்பட்ட உற்பத்திகளை உயர் மட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு மாத்திரம் அல்லாது அவற்றின் பொதியும் சந்தையை கவரும் வகையில் தயார் செய்வதற்கு முறைமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக விற்பனை கிளைகளை நாடு பூராகவும் ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் , எதிர் வரும் வருடங்களில் இந்த கிளை அலுவலகங்கள் திறப்பதற்கும், சந்தைப்படுத்தலை கிராமத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் மாகாண மட்டத்தில் மாகாண பிரதேச அலுவலகங்களை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நீண்ட காலமாக வேறாக காணப்பட்ட ஆயுர்வேதத் துறையானது சுகாதார அமைச்சின் கட்டமைப்பிற்கு உள்ளாக்குவதும் அது தொடர்பாக தற்பொழுது சுகாதாரம் போசணை மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சின் தலையீடு இங்கு பிரதானமாக காணப்பட்டது என்பதை கவனத்திற் கொள்ளத்தக்கது.

லால் சமரசிங்க
தலைவர்
இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம்

இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம் - பணிப்பாளர் சபையின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 142 ஆம் பிரிவுக்கு ஏற்ப 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர் சபை அறிக்கை உள்நாட்டு மருத்துவர் கௌரவ அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

(01) அறிமுகம்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1969 ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி 14853/3 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அப்போதிருந்த கைத்தொழில் மற்றும் மீன்பிடி அலுவல்கள் பற்றிய அமைச்சரினால் இலங்கை ஆயுர்வேத மருந்தகக கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது,

(02) தூரநோக்கு

ஆரோக்கியமான சமூகமொன்று நோக்கி சுதேச மருத்துவ விஞ்ஞானத்தின் தனித்துவத்தை பாதுகாத்து தேசிய மற்றும் சர்வதேச மருந்தகத் தேவைகளை உயர் தரத்துடன் நிறைவு செய்கின்ற சேவையை அடிப்படையாகக் கொண்ட முன்னோடி நிறுவனமொன்றாதல்.

(03) செயற்பணி

உயர் தரத்துடன் கூடிய ஆயுர்வேத மருந்து உற்பத்தி, ஏற்றுமதி, விநியோகம், ஆராய்ச்சி, சேவை வழங்கல் மற்றும் பாதுகாப்பு ஊடாக மக்கள் தேவைகளை நிறைவு செய்வதுடன் ஊழியர் சுபீட்சத்தை ஏற்படுத்தல் மற்றும் சமூக நலன்புரியை நிறைவேற்றுவதுடன் ஊழியர் முன்னேற்றத்தை ஏற்படுத்தல் மற்றும் சமூக நலன்புரியை மேற்கொண்டு ஆரோக்கியமான சமூகமொன்றை நோக்கி முன்னோடியாக செயற்படுதல்.

(04) பிரதான இலக்குகள்

1. ஆயுர்வேத மருந்து வகை உயிரியல் பொருட்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற தொழில் முயற்சிகளை நடாத்திச் செல்லல்.

2. அத்தியவசிய ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி (பச்சை மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட மருந்து ஆகிய இரண்டு வகைகளையும்) இறக்குமதி செய்தல் மற்றும் அவ்வாறான மருந்து வகைகளை விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல்.

3. உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற பச்சை ஆயுர்வேத மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் அந்த மருந்து வகைகளை தயார் செய்தல்.

4. ஆயுர்வேத மருந்துகள் பற்றிய கல்வ மற்றும் வரலாற்று ரீதியான பொருட்கள் பற்றி ஆராய்ச்சி செய்தல் மற்றும் அவ்வாறான மருந்து வகைகளை நியமப்படுத்தல்.

5. ஆயுர்வேத மருந்தகங்களை நடாத்திச் செல்லல் மற்றும் மருந்து வகைகளின் உற்பத்தி தொடர்பாக தேவையான ஆயுர்வேத மருந்துகளின் உள்நாட்டு மருந்து வகைகளை உற்பத்தி செய்தல்.

6. ஆயுர்வேத மருந்து வகைகளின் உற்பத்தி தொடர்பாக தேவையான தூய்மையான வெண்ணையை உற்பத்தி செய்தவற்கு துப்பராவன பசுப் பால் பெற்றுக் கொள்வதற்காக பாட் பண்ணைகளை நடாத்திச் செல்லல்.

7. மருந்து வகைகளை தயார் செசெய்வதற்காக தேவையான தேன் பாணியை உற்பத்தி செய்தல் மற்றும் தேன் பூச்சிகளை உற்பத்தி செய்தல் மற்றும் தேன் பூச்சிகளை உற்பத்தி செய்வதை வீட்டுக் கைத்தொழிலாக அபிவிருத்தி செய்தல்.

(05) வியாபர நிலையங்கள்

5.1. பிரதான அலுவலகம் மற்றும் உற்பத்தி நிலையம்

மஹரகம, நாவின் வீதியில் இல. 94 ஆம் இலக்க நிலையத்தில் அமைந்துள்ளது.

5.2. விற்பனை நிலையம்கள்

விஜேராம (மருத்து பிணிச் சேவையுடன்)	: இல. 22, இலங்கை சொரத மாவத்த, கங்கொடவில, நுகேகொட.
கண்டி (மருத்து பிணிச் சேவையுடன்)	: இல. 70, யடிநுவர வீதி, கண்டி.
தியதலாவ	: சனானி மந்திரய, தியதலாவ.
அநுராதபுரம்	: இல. 414/2, சிரிமேவன் மாவத, இரண்டாவது ஒழுங்கை, அநுராதபுரம்
பதுள்ளை	: பீ 35/36, முதலாவது மாடி, பஸ் தரிப்பிடம், பதுள்ளை
கொடுவை	: கொடுவை புகையிரத நிலையம், 2 ஆவது மேடை, கொடுவை
நாவின்னை	: இல. 94, பழைய கோட்டை வீதி, நாவின்னை மஹரகம
இரத்தினபுரி	: இல. 32, பஸ்தரிப்பு நிலைய வீதி, இரத்தினபுரி
தங்கல்ல	: இல. 23, கடல் வீதி, தங்கல்ல.
யாழ்ப்பாணம்	: இல. 61ஏ, புதிய வர்தக கட்டிடம், யாழ்ப்பாணம்.
காலி	: இல. 38, ஒல்கட் மாவத்தை, (தங்கேதர வீதி), காலி.
செத்சிறிபாய	: செத்சிறிபாய, பத்தரமுள்ள.
மொனராகல	: இல. 267, வெல்லவாய வீதி, மொனராகல.
ஓய்வூதிய சம்பளத் திணைக்களம்	:ஓய்வூதிய சம்பளத் திணைக்களம்

(06) **<u>பணிப்பாளர் சபை</u>**

1. திரு. கீர்த்தி லால் சமரசிங்க – தலைவர்
2. திரு. சந்தருவன் லக்சேவர – முகாமைத்துவ பணிப்பாளர்
3. திரு. எப்.எம்.என். ஆர். அபேவர்தன – பணிப்பாளர் சபை அங்கத்தவர்.
4. டாக்டர் திரு. டப்.கே. தயானந்த – பணிப்பாளர் சபை அங்கத்தவர்.
5. திரு. எச்.வை. பெரேரா – பணிப்பாளர் சபை அங்கத்தவர்.
6. திரு. எச்.கே. குலதுங்கமுதலி – பணிப்பாளர் சபை அங்கத்தவர்.
7. திரு. ஆர்.ருசான்தன் – திறைசேரி பிரதிநிதி

<u>(07) நிறைவேற்றுத் தர அலுவலர் சபை</u>

1. தலைவர் – திரு. கீர்த்தி லால் சமரசிங்க
2. முகாமைத்துவப் பணிப்பாளர் – திரு. சந்தருவன் லக்கேசர
3. பொது முகாமையாளர் – திரு. எம்.ஜே. மாரசிங்க
4. பொது முகாமையாளர் (நிதி) – திருமதி காயத்திரி ஹேரத்
5. முகாமையாளர் (தொழிற்சாலை) – திரு.கே.டீ.எம். அர்ஜுன சந்திரசேன
6. முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) – திரு. டீ.எள். பர்னாட் வரகாகொட
7. முகாமையாளர் மனித வளங்கள்) – திருமதி லங்கா வரகாகொ
8. முகாமையாளர் (நிதி) – திரு. கலும் பதிரவசம்
9. முகாமையாளர் (தரக் கட்டுப்பாட்டாளர்) – திருமதி. எம்.ஏ.டீ.டீ.சீ. மந்திரிரத்ன
10. பிரதான மருத்துவ அலுவலர் (பதில்) – திருமதி. சோமா நாமசிங்க
11. மருத்துவ அலுவலர் – திருமதி. ஓசதி பத்திரண
12. மருத்துவ அலுவலர் – திருமதி. நில்மினி குணசேகர
13. மருத்துவ அலுவலர் – திருமதி தமயந்தி கொடிகார
14. திட்டமிடல் அலுவலர் - திரு. ககிரதெணிய
15. கணக்காளர் – திருமதி ஏ.டீ.எஸ். பிரேமசிங்க

(08) பதவியணி உள்ளடக்கம்

2015 ஆம் ஆண்டில் பதவியணி உள்ளடக்கம்

பதவிப் பெயர்	அலுவலகம்	உற்பத்திக் கூடம்	விஜேராம மருந்துச் சபை	நாவின்ன மருந்துச் சாலை	கண்டி மருந்துச் சாலை	தியத்தலாவ மருந்துச் சாலை	பதுல்லை மருந்துச் சாலை	அநுராதபுர மருந்துச் சாலை	டக்கொடுவ மருந்துச் சாலை	தங்கல்ல மருந்துச் சாலை	இரத்தினபுரி மருந்துச் சாலை	மொனராகல மருந்துச் சாலை	காலி மருந்துச் சாலை	செத்சிறபாய மருந்துச் சாலை	ஒய்வுதிய தனைக்களம்	யாழ்ப்பான மருந்துச் சாலை	நிக்கவரெட்டிய மருந்துச் சாலை	நிக்கவரெட்டிய மருந்துச் சாலை	மொத்தம்
சிரேட்ட முகாமையாளர்கள்	02	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	02
முகாமையாளர்கள்	04	05	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	09
கனிஷ்ட முகாமையாளர்கள்	12	02	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	14
முகாமைத்துவ உதவியாளர் சேவை தொழில்நுட்ப அலுவலர்	01	13	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	14
முகாமைத்துவ உதவியாளர் சேவை /தொழில்நுட்பம் அல்லாத அலுவலர்கள்	50	10	01	01	01	01	01	-	01	01	01	01	01	01	-	01	-	-	72
ஆரம்ப தர நடுத்தர திறன் அலுவலர்கள்	-	12	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	12
ஆரம்ப நிலை திறன் அலுவலர்கள்	-	12	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	12
ஆரம்ப நிலை திறனல்லா அலுவலர்கள்	23	101	03	02	01	01	01	02	01	01	01	01	02	-	01	01	01	02	145
ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள்	25	32	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	57
தற்காலிக தொழிலாளி / சமயாசமய தொழிலாளி	-	06	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	06
மொத்தம்	117	193	04	03	02	02	02	02	02	02	02	02	03	01	01	02	01	02	343

(09) ஊழியர் ஊக்கக் கொடுப்பனவு மற்றும் நலன்புரி

ஊழியர் ஊக்கப்படுத்தல்

மிகவும் வினைத்திறனான மற்றும் செயற்திறனான சேவையொன்று தொடர்பாக மொத்த பதவியணிக்கும் கீழ் குறிப்பிட்ட கொடுப்பனவு வழங்கப்படும். வருகைக்கான ஊக்கக் கொடுப்பனவு, உற்பத்தியை அடிப்படையாக்க் கொண்ட உற்பத்தி ஊக்கக் கொடுப்பனவு, வினைத்திறன் கொடுப்பனவு (தொழிற்சாலை ஊழியர்கள் தொடர்பாக), வருடாந்த ஊக்கக் கொடுப்பனவு, பெற்றுக் கொள்ளாத மருத்துவ லீவுகளுக்கு நிதி செலுத்துதல்

ஊழியர் நலன்புரி

உற்பத்திச் செயற்பாடு தொடர்பாக நேரடியாக தொடர்புபடுகின்ற சகல ஊழியர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் நிலைய ஊழியர்கள் தொடர்பாக சீருடை வழங்கப்பட்டுள்ளது. சகல ஊழியர்களுக்கும் காலை சிற்றுண்டியொன்றுடன் தேனீர் வழங்குதல். கூட்டுத்தாபனத்தின் சகல பதவியணியினருக்கும் மற்றும் அவர்களுடைய குடும்பத்தின் அங்கத்தவர்கள் தொடர்பாக மூன்று நாள் வருடாந்த உல்லாசப் பயணமொன்றை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தின் அனுசரணை வழங்கப்பட்டுள்ளது. மரணச் சடங்குகளின் போது தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குதல் உள்ளடங்கலாக ஏனைய வசதிகளை வழங்குதல். ஏப்ரல் மாத புதுவருட விழா தொடர்பாக ரூ. 5,500.00 பெறுமதியான பரிசில் வ்வுசர் பத்திரமொன்றை சகல ஊழியர்களுக்கும் வழங்குதல்.

(10) மருந்து உற்பத்தி அலகு அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன .

	மருந்துப் பெயர்	அலகு	2015 ஆண்டு	2014 ஆண்டு	2013 ஆண்டு	2012 ஆண்டு	2011 ஆண்டு
1	அரிஷ்ட / வைன்	மி.லீ.750	152,594	149,196	130,960	145,552	140,351
2	ஆசாவ	மி.லீ.750	121,840	105,860	142,933	112,948	124,483
3	க்வாத்த	மி.லீ.750	51,795	80,247	60,393	45,945	65,506
4	சிரப்	மி.லீ.750	17,580	18,573	17,769	20,140	21,812
5	தைலம்	மி.லீ.750	170,067	171,392	163,484	139,847	147,702
6	சூர்ண	கி.கி.	28,756	24,942	29,225	45,945	26,092
7	கல்க / லேக /லேப	கி.கி.	20,491	18,360	22,173	19,945	18,360
8	ரச	கி.கி.	2,942	2,505	3,122	1,417	1,618
9	வடிகா / குகுள்	கி.கி.	11,696	10,166	15,233	9,651	14,422
10	**புதிய உற்பத்தியொன்று 01**						
	(1) ரணஹங்ச இரசாயனம்	கி.கி.	-	-	139	412	202
	(2) திரிபலா மாத்திரை	கி.கி.	937	988	710	500	1,057
	(3) மேதகரணி மாத்திரை	கி.கி.	840	808	457	191	256
	(4) மதுரு தூபய	கி.கி.	-	-			
	(5) புபேசி பாம்	கி.கி.	21	21	11	27	57
	(6) ஜீவாலேப்ப பாம்	கி.கி.	513	-			
	(7) மதுமேஹகரணி மாத்திரை	கி.கி.	-	-			
11	**புதிய உற்பத்தி**						
	(1) அவித்த ஆணம்	கி. 05	158,560	226	151,893	103,680	95,000
	(2) அவித்த ஆணம்	கி. 250	-	-		1	
	(2) பேயாவ	கி. 05	274,328	219,784	245,785	147,313	194,000
	பேயாவ	கி. 250	-	10		1	
	(3)பஸ் பங்கு	கி. 50	36,742	70,556	44,671	67,924	44,560
	(4) கோமாரிகா செம்பு	மி.லீ. 95	21,344	11,802	723	8,626	6,263
	(5) இரமுசு துகள்	கி.கி.	-	-		338	33
	(6) பெலிகெட மரத் தூள்	கி.கி.	-	-		560	-
	(7) WENIWEL BODY WASH	மி.லீ. 300	10,336				
	WENIWEL BODY WASH	மி.லீ. 60	16,977				
	வேரு உற்பத்திகளி						-
	(1) ANTI DIABETIC HERBLE TEA 25 BAGS	பெட்டி		-		32	-
	(2) HERBLE CURRY SOUP 5g (EEPORT)	5g		-		500	-
	(3) MIXE HERBLE TEA 1.5g /06 BAGS (E	Nos	13,990	3,200		4,320	-
	(4) SPICY HERBLE TEA 5g (EXPORT)	5g		-		500	-
	(5) PANTA KASAYA 60g	கி.கி.		-		141	-
	(6) OUSHADHA MANJUSA (FINISH GOO	பெட்டி	17				

(11) அரச துறைக்கும் தனியார் சந்தைக்கும் விற்பனை செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதிக கீழ் வருமாறு

(ரூ. மில்லியன்களில்)

	2015ஆண்டு	2014 ஆண்டு	2013 ஆண்டு	2012 ஆண்டு	2011 ஆண்டு	2010 ஆண்டு
அரச துறை	414.35	340.45	336.49	315.98	294.76	263.9
விற்பனை நிலையங்கள்						
விஜேராம மருத்துவ நிலையம்	12.27	13.30	10.59	6.54	6.36	6.52
நடமாடும் சந்தை	4.42	0.97	0.33	0.12	0.27	
கண்டி விற்பனை நிலையம்	7.52	7.96	6.22	6.53	5.37	4.86
தியதலாவ விற்பனை நிலையம்	4.44	5.12	3.05	3.33	1.94	3.44
அநுராதபுர விற்பனை நிலையம்	3.77	3.81	2.00	1.85	0.98	1.15
பதுள்ளை விற்பனை நிலையம்	3.41	3.27	2.94	2.65	1.77	1.63
பிடகொடுவ விற்பனை நிலையம்	2.22	-	2.22	4.15	3.66	2.89
நாவின் விற்பனை நிலையம்	14.79	13.82	12.86	9.78	9.28	8.14
088 களஞ்சியம்	10.07	17.34	19.86	23.54	20.38	16.48
இரத்தினபுரி விற்பனை நிலையம்	19.53	18.01	12.46	9.39	4.74	3.11
தங்கல்ல விற்பனை நிலையம்	3.91	2.84	2.09	1.25	2.17	1.10
பரீட்சை நிலைய விற்பனை நிலையம்		-	0.98	1.02	1.01	0.75
யாழ்ப்பாண விற்பனை நிலையம்	4.3	4.17	4.53	2.89	2.07	1.01
காலி விற்பனை நிலையம்	8.02	7.93	5.58	4.65	3.68	1.04
செத்சிறிபாய விற்பனை நிலையம்	1.94	1.71	1.67	1.20	0.21	
ஜனகலா விற்பனை நிலையம்	0	0.002	0.31	0.60	0.03	
மொனராகல விற்பனை நிலையம்	1.24	1.42	1.27	0.74		
பத்தரமுள்ள விற்பனை நிலையம்	0.70	1.17				
வேரஹேர விற்பனை நிலையம்	1.61	1.04				
மிதக்கும் விற்பனை நிலையம்	0.23	0.61				
ஓய்வூதிய சம்பள திணைக்கள விற்பனை	1.15					
மொத்தம்	**519.89**	**444.94**	**425.45**	**396.21**	**358.68**	**316.02**

(12) வருமானம் பகிர்தளிக்கப்பட்டுள்ள விதம் (சதவீதமாக)

	2015	2014	2013	2012	2011	2010
விற்பனைகள்	100.00	100.00	100.00	100.00	100.00	100.00
கழி: விற்பனை கிரயம்	54.76	68.52	62.46	61.81	56.13	72.30
மொத்த இலாபம்	45.24	31.48	37.54	38.19	43.87	27.70
கூட்டு : வேறு வருமானம்	1.15	2.34	2.08	4.68	4.28	1.79
கூட்டு	46.39	33.82	39.62	42.87	48.15	29.49
கழி:						
நிறுவன மற்றும் நிருவாகச் செலவீனம்	21.65	18.50	18.29	19.56	21.81	19.95
விற்பனைகள் மற்றும் விநியோகித்தல் செலவீனங்கள்	11.98	10.91	11.65	9.03	8.60	6.77
நிதிச் செலவீனம்	1.62	1.98	0.64	0.01	0.10	1.28
வேறு செலவீனங்கள்	-	-	-	0.62	-	-
மொத்த செலவீனம்	35.25	31.39	30.58	29.22	30.51	28.00
செயற்பாட்டு இலாபம்	11.14	2.43	9.04	13.65	17.64	1.49
கூட்டு: வட்டி வருமானம் மற்றும் செயற்பாடல்லாத வருமானம்	0.82	1.23	1.31	3.75	0.55	0.43
வரி கழிப்பதற்கு முன்னர் இலாபம்	11.96	3.66	10.35	17.40	18.19	1.92
கழி:						
நிகவரெட்டிய மூலிகை தோட்ட நட்டம்	1.03	0.4	0.43	0.45	0.37	0.02
கழி:						
வரி தொடர்பாக ஒதுக்க ஏற்பாடு	4.06	1.46	2.65	4.74	5.16	0.38
நிகர இலாபம்	**6.87**	**1.80**	**7.27**	**12.21**	**12.66**	**1.52**

(13) இலாப பங்களிப்பு (ரூ. மில்லியன்களில்)

	2015	2014	2013	2012	2011	2010
விற்பனைகள்	519.89	444.94	425.45	396.22	358.68	316.02
கழி: விற்பனை கிரயம்ம்	284.69	304.89	265.72	244.90	201.33	228.48
மொத்த இலாபம்	235.2	140.05	159.73	151.32	157.35	87.54
கூட்டு: வேறு வருமானம்	11.08	9.39	8.85	18.55	15.34	5.64
மொத்த வருமானம்	246.28	149.44	168.58	169.87	172.69	93.18
கழி:						
நிறுவன மற்றும் நிருவாக செலவீ	112.57	82.30	77.82	77.55	78.23	63.04
விற்பனை மற்றும் விநியோகச் செ	62.31	48.55	49.56	35.80	30.86	21.39
நிதி செலவீனம்	8.44	8.81	9.48	0.07	0.37	4.03
வேறு செலவினம்	-	-	-	2.49	-	-
மொத்த செலவீனம்	183.32	139.66	136.86	115.91	109.46	88.46
செயற்பாட்டு இலாபம்	62.96	9.78	31.72	53.96	63.23	4.72
சேர்: வட்டி வருமானம்	4.28	5.46	6.78	1.45	0.83	0.57
செயற்பாடல்லா வருமானம்	0.25	1.01	5.59	13.44	1.15	0.72
நிகரவரெட்டிய மருந்து பூங்கா (ந	(5.36)	(1.78)	(1.83)	(1.79)	(1.33)	-
வரிக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்	(21.10)	(6.51)	(11.28)	(18.78)	(18.52)	(1.20)
நிகர இலாபம்	**41.03**	**7.96**	**30.98**	**48.28**	**45.36**	**4.81**

(14) மருந்து உற்பத்தி தொடர்பாக மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பிரச்சினைகள்

எமது உற்பத்திகள் தொடர்பாக மூலப் பொருட்களை விநியோகித்துக் கொள்ளும் போது பச்சை மருந்துகளை விநியோகித்தல் மிக கடினமான பணியாக இருப்பதுடன் உள்நாட்டு விநியோகத்தர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்ற நிகவரெட்டிய ரன்தெனிகம மற்றும் மெதவச்சிய மூலிகைத் தோட்டங்களிலிருந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரளவு தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அநுராதபுர பிரதேசத்தில் பச்சை மருந்து மூலிகைகளை சேகரிக்கும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(15) கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலை மற்றும் களஞ்சிய வசதிகளை விஸ்தரிப்புச் செய்தல்.

உள்நாட்டு மருந்து உற்பத்தி தொடர்பாக நவீன இயந்திர சாதனங்கள் பல சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன் அந்த இயந்திரங்கள் பற்றிய ஆய்வொன்றைச் செய்து எமது கூட்டுத்தாபனத்திற்கு பொருந்தும் இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்து பதிரகொட புதிய உற்பத்தி நிலையத்தில் ஸ்தாபிப்பதற்கும் அதன் ஊடாக எதிர்பார்த்த மற்றும் வினைத்திறனான உற்பத்தியைச் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவது தொடர்பாக தற்பொழுது பதிரகொட புதிய உற்பத்திச்சாலையின் களஞ்சிய கட்டிடத் தொகுதியை பயன்படுத்துவதுடன், தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நான்கு மாடி களஞ்சிய கட்டிடத்தொகுதியின் நிர்மாணிப்புப் பணிகளை நிறைவடைந்ததும் அந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்குப் புறம்பாக வட மத்திய, வடக்கு, கிழக்கு போன்ற மாகாணங்களுக்குத் தேவையான உற்பத்திகளை அநுராதபுர பிரதேச களஞ்சியத்திலிருந்து மருந்துகளை விநியோகிப்பதற்கு எதிர்காலத்தில் சகல நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளது.

(16) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை நிறுவுதல்

இலங்கை ஆயுர்வேத மருந்தக்க் கூட்டுத்தாபனம் 2015 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 ஐ நடாத்தியுள்ளதுடன், அதில் கணக்காய்வாளரினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகள், உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் வெளியிடப்படுகின்ற கணக்காய்வு வினாக்களும் கலந்துரையாடப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சீர் செய்வதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக சுகாதாரம், போசனை மற்றும் உள்நாட்டு மருத்துவர் உள்நாட்டு மருத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில் அமைச்சு மட்டத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 03 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படுவதுடன், அதன் போது கணக்காய்வு வினாக்களுக்கு எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை அமுல்படுத்தும் முன்னேற்றம் பற்றி கவனம் செலுத்தப்படும்.

2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழுவின் அங்கத்துவச் சபையின் விளக்கங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. ஆர். ருசாந்தன்	– திறைசேரி பிரதிநிதி – குழு அங்கத்தவர்
திரு. எஸ்.எம்.என். ஆர். அபேவர்தன	– பணிப்பாளர் சபை அங்கத்தவர் – குழு அங்கத்தவர்
டாக்டர் டப்.கே. தயானந்த	– பணிப்பாளர் சபை அங்கத்தவர் – குழு
திருமதி. எம்.ஆர்.பீ. பரநான்து	– சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சு பிரதிநிதி – குழு அங்கத்தவர்
திருமதி எஸ்.ஏ.என். பெரேரா	– அரச கணக்காய்வு அதிகாரி – குழு மேற்பார்வையாளர்

திரு. யூ. ஜயரத்ன – உள்ளக கணக்காய்வாளர் – அழைப்பாளர் / குழுச் செயலாளர்

(17) நிதி முகாமை மற்றும் கணக்காய்வு வினாக்களுக்கான கருத்துக்கள்

கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கட்டமைப்பில் காணப்படுகின்ற பலதரப்பட்ட குறைபாடுகள் மற்றும் கட்டமைப்பு குறைபாடுகள் பற்றி கணக்காய்வாளர் நாயகத்தினால் அடிக்கடி கணக்காய்வு வினாக்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற கணக்குக் குழு கலந்துரையாடலின் போது அந்தக் குறைபாடகள் சுட்டிக்காட்டப்பட்டதுடன், தற்பொழுது அந்தக் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்படுகின்ற ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு ஏற்ப, பணிப்பாளர் சபையின் கட்டளையின் படி தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளது என அறிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

- ❖ சரியான வழிகாட்டலொன்றைச் செய்த சுகாதாரம், போசனை மற்றும் உள்நாட்டு வைத்தியர் திரு ராஜித சேனாரத்ன அமைச்சருக்கும், டீ.எம்.ஆர்.பீ. திசானாயக செயலாளர் உள்ளடங்கலான பதவியணியிற்கும்,
- ❖ கூட்டுத்தாபனத்தின் மூலதன மற்றும் மிகை செலுத்தல்களை முன்னேற்றுவதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய பொதுத் திறைசேரிக்கும்,
- ❖ இடையறாத ஒத்துழைப்பை வழங்கிய ஆயுர்வேத திணைக்களத்தின் தற்பொழுதைய ஆயுர்வேத ஆணையாளர் உள்ளடங்கலாக பதவியணிக்கும் ஆயுர்வேத ஆராய்சி நிறுவனத்தின் பணிப்பாளர் உள்ளடங்கலாக பதவியணிக்கும்,
- ❖ பூர்த்தி செய்யப்பட்ட மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளுக்கும்,
- ❖ கட்டமைப்பு கட்டுப்பாட்டில் குறைபாடுகள் மற்றும் பிழைகள் மற்றும் தவறுகளை சீர் செய்து கொள்வதற்கு வழிகாட்டலொன்றைச் செய்த கணக்காய்வாளர் உள்ளடங்கலான பதவியணிக்கும்,
- ❖ மீளாய்வு வருடத்தின் போது கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வது தொடர்பாக உவப்பான ஒத்துழைப்பை வழங்கிய கூட்டுத்தாபனத்தின் முகாமைக்கும் மற்றும் ஊழியர் சபைக்கும் எனதும் பணிப்பாளர் சபையினதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(லால் சமரசிங்க)
தலைவர்
இலங்கை ஆயுர்வேத மருந்தக்க கூட்டுத்தாபனம்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. எச்எஸ்எம்/சீ/ஏடீசீ/01/15/32
My No.

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி 2018 சனவரி 05
Date

தலைவர்,
இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுன்ன ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதத்தின் பேரில் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டடது. இதற்கு மேலதிகமாக நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக்கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்பட்டதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,923,741 ஆன மூலதன ஒதுக்கீடு (capital reserve) மற்றும் ரூபா 19,523 ஆன அண்ணியச் செலாவணி சீராக்க ஒதுக்கத்தின் (foreign exchange reconciliation reserve) தன்மை மற்றும் நோக்கங்கள் தொடர்பாக நியமத்தின் 79(ஆ)இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

(i) 2009 சனவரி 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 06 மாத காலப்பகுதியில் ஒதுக்கத்தின் கீழ் முன்னைய ஆண்டுகளின் சீராக்கமாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 38,613,358 தொகை மீளாய்வாண்டின் போது நிறுத்திவைத்த உழைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் அம்மீதி தொடர்பாக விரிவான தரவுகள் மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட ரூபா 15,715,396 தொகையான இறுதி முடிவுப்பொருள் இருப்பு குறைத்து சீராக்கப்பட்டதை சரிசெய்த போது நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் பின்னோக்கி சீராக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களின் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட்டிருந்ததுடன், அது கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12

வருமான வரிச் செலவினம் மற்றும் கணக்கீட்டு இலாபத்திற்கு இடையே உள்ள தொடர்பு தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான ரூபா 104,988,115 பெறுமதியான சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் கூட்டுத்தாபன நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20

(i) அரசின் மானியங்களிலிருந்து செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்குரிய ரூபா 1,237,316 தொகையான வருடாந்த பெறுமானத்தேய்வு செலவினத்திற்கு சமமான பெறுமதியில் அரச மானியத்திற்கு காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் அரசாங்க மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 94,410,400 சொத்துக்களுக்கு காலக் கழிவு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த சொத்துக்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24

கூட்டுத்தாபனத்தினால் உயர் முகாமைத்துவத்திற்கு செலுத்திய குறுங்கால ஊழியர் நலன்கள், ஏனைய நீண்டகால நலன்கள் மற்றும் சேவையை முடிவுறுத்துதல் நலன்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

(i) நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 86,681,085 தொகையான வியாபார கடன்பட்டோரின் காலக்கழிவுப் பெறுமதியை (amortized cost) கணிப்பிடாமல் ஐயக் கடன் மற்றும் அறவிட முடியாக் கடனுக்காக ரூபா 2,493,761 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஊழியர் கடன் காலக்கழிவுப் பெறுமதியை (amortized cost) கணிப்பிடுவதற்காக மீளாய்வாண்டின் சந்தை வட்டி வீதம், எளிய வட்டி வீதமாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுககளின் போது எளிய வட்டி வீதமாக பயன்படுத்தப்பட்ட 12 சதவீதமான வீதத்தை நியாயமான காரணங்களை வெளிப்படுத்தாமல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 16,710,369 ஆன ஊழியர் கடன் காலக் கழிவுப் பெறுமதி கணக்கீட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 141,243 தொகையான மீண்டுவரும் செலவினம், காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டு வழுக்கள் காரணமாக மீளாய்வாண்டிற்காக நடைமுறையல்லாத சொத்துக்களின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 54,655 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த ரூபா 163,083 தொகை விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2 கணக்கு விடயங்களின் பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் அட்டவணைகள் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 2,340,683 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

கணக்கின் பெயர்	பேரேட்டு கணக்கின் பிரகாரம் மீதி	பட்டோலை/மீதிகளை உறுப்படுத்தல்களின் சான்றிதழ் பிரகாரம் மீதி	வித்தியாசம்
	ரூபா	ரூபா	ரூபா
(அ) விற்பனைகள்	519,887,808	522,196,560	2,308,752
(ஆ) இலங்கை வங்கி நிலையான வைப்புக்கள்	1,747,780	1,715,849	31,931
			2,340,683

2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

	கணக்கு விடயங்கள்	பெறுமதி	சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள்
		ரூபா	
(i)	வெளித்தரப்பினருக்கு நன்கொடையாக வழங்கிய மருந்துகள்	765,352	முறையான அங்கீகாரம்
(ii)	பணிக்கொடை ஏற்பாடு	3,958,216	கணிப்பீடுகளுக்குரிய பட்டோலைகள்
(iii)	நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கம்	93,373,135	நாட்குறிப்பு பதிவுகள்

2.3 பெற வேண்டிய கணக்குகள்

2012 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 243,031 ஆன வருமானத்தை இனங்காண்பதற்காக எவ்வித எழுத்துமூல சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் போதியளவு நிதிஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 353,359,512 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

